

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,

மனைப்பிரிவு வரைபடம்

திருநெல்வேலி மாவட்டம்,

நாங்குநேரி வட்டம்,

நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம்,

முனைஞ்சிப்பட்டி ஊராட்சி,

முனைஞ்சிப்பட்டி கிராமம்.

நில அளவை எண் - 23ஏ / 5, 24ஏ / 1ஏ - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு = 1:200.

இணையதள விண்ணப்பம் எண் : T0GC4DPB / 2024

குறிப்பு

மனைப்பிரிவு இடத்தின் மொத்தப் பரப்பு	-	5050.00 ச.மீ (1.247 ஏக்கர்)
உத்தேச சாலையின் பரப்பளவு	-	1444.14 ச.மீ
மீதமுள்ள பரப்பளவு	-	3605.86 ச.மீ

கோரிய மனைகள் : 24

ஒதுக்கிய மனைகள் : 24

மனைப்பிரிவு இடத்தின் எல்கை

நிலையில் உள்ள சாலை

பொது ஒதுக்கீடுகள் :-

TNCDBR - 2019 விதி - 47(6)-ன் படி பூங்கா பரப்பு 360.59 ச.மீ. -க்கான அரசு வழிகாட்டி மதிப்பின் படி ரூ.18025.00/-, நாள் :- 12/11/2024 அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

உள்ளாட்சிக்கு தான ஆவண எண் :- 1849 / 2024, நாள் :- 05/11/2024 மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகள்.

1. பொது உபயோகம் (A) (LOCAL BODY) - 25.00ச.மீ (0.69%)
2. பொது உபயோகம் (B) (TANGEDCO) - 30.37ச.மீ (0.84%)
3. உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு - 1444.14ச.மீ

மூலை முடக்கு - 9.0மீ மற்றும் 10.0மீ அகல சாலைக்கு 1.50மீ x 1.50மீ

நிபந்தனைகள் :-

1. அரசாணை நிலை எண் : 71 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் : 16.08.2003-ன் படி நில உரிமம் குறித்து முனைஞ்சிப்பட்டி ஊராட்சி தலைவர் உறுதி செய்துகொள்ள வேண்டும்.
2. அரசாணை நிலை எண் : 181 மற்றும் 144 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 09.12.2020 மற்றும் 16.07.2022-ன் படி தலைவர் முனைஞ்சிப்பட்டி ஊராட்சி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் சாலைகள் மற்றும் பொது உபயோகம் நிலபரப்பினை முனைஞ்சிப்பட்டி ஊராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதனை உள்ளாட்சி பெயருக்கு வருவாய் உட்பிரிவு செய்தும், மனுதாரரால் தார்சாலை அமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. இம்மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கும்முன் நில ஆர்ஜிதம் ஏதும் இல்லை எனவும், எந்தத் துறையாலும் நல ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், மற்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்று தலைவர் முனைஞ்சிப்பட்டி ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நில உரிமம் குறித்து சமர்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின், மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
5. மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின் அழுத்த கம்பி பாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மனுதாரர் தன் சொந்த செலவில் மாற்றி அமைக்க வேண்டும்.
6. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றமும் இன்றி மனைபிரிவு நுளைவு வாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக நிறுத்தப்பட வேண்டும்.
7. இம்மனைப்பிரிவில் அமையும் சாலையின் போக்கினை தடுக்கும் வகையில் சுற்றுச்சுவர் எழுப்புதல் கூடாது.

ம.வ/திலிமாநஊஅ எண் - SWP / 93 / 2024

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திருநெல்வேலி மாவட்டம்.

Signature Not Verified
Signed by: Joint Director
Location:Tirunelveli
Date:2024.11.20 20:28:27